முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1411

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.08.2023, வியாழக்கிழமை

(சோபகிருது வருடம் ஆடி மாதம் 25 ம் நாள்)

1. பார்காக்க வந்த குருராஜனே
   பரம ஆனந்த சதாசிவ அரங்கனே
   சீர்திருத்தம் உலகினில் செய்து
   சித்திமிகு ஞானிகளை உருவாக்க
2. ஆக்கவே ஆறுமுகன் என் அவதாரமாக
   ஆற்றல் மிகுந்த குருவாக வந்த தேசிகனே
   ஆக்கமுடன் சுப்ரமணியர் யானும் அருளுவேன்
   உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
3. தேக்கமின்றி அரங்கன் உன் சன்மார்க்கம்
   தேசமெல்லாம் வலம் வர
   ஊக்கமுடன் அன்பர்கள் ஞானவான்களாக
   உருமாறி இனிதே இந்த கலியுகத்தில்
4. கலியுகத்தில் அரங்கன் உன் பெயர் சொல்லி
   கட்டமைப்பாய் இணைந்து இனிதே ஞானபலம்
   ஞானபலம் கூட்டி உலகெங்கிலும் ஞானிகளாக சக்திநிலை மாறி
   தான தர்ம ஆற்றலோடு தரணியோரை ஒன்றுபடுத்தி இனிதே
5. இனிதே அரங்கன் நீ விரும்புகின்ற
   இணையில்லா அகத்தியர் குலமாக்கி
   கனிவேலவன் யான் கருணையோடு இறங்கி
   கட்டமைப்பை காத்து உலகமெல்லாம் ஒரு குடையின் கீழ்
6. ஒருகுடையின் கீழ் ஞான ஆட்சியாக
   உரைத்திடுவேன் ஞானிகள் நிறைந்த பூமியாக
   வானவர்கள் மெச்ச நல்லாட்சி
   வையகம் அரங்கன் உன் அவதாரத்தால் காணக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—